**செப்டம்பர் – 03**

# TNPSC துளிகள்

- அனைத்து மத அமைப்புகளும் மற்றும் வேறு எந்த குழுவினரைச் சேர்ந்த மக்களும், ஃபத்வா வழங்குவதில் இருந்து தடைசெய்யப்படுவதாக உத்தரக்கண்ட் உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.
    - ஃபத்வா என்பது, ஒரு குறிப்பிட்ட பிரச்சனை தொடர்பாக மதச் சட்ட (முஃப்தி) வல்லுனரால் வழங்கப்படும் ஒரு இசுலாமியத் தீர்ப்பாகும்.
- இமாச்சலப் பிரதேசத்தின் சிம்லாவிற்கு, குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீர் திட்டத்திற்காக ரூ.929.89 கோடியை நிதிஉதவியாக அளிப்பதற்கு உலக வங்கியானது கொள்கை ஒப்புதல் அளித்துள்ளது.
- திருச்சி மாநகராட்சியானது QR முறை பொருத்தப்பட்ட வீடுதோறும் கழிவு சேகரிப்பு கண்காணிப்பு முறையை அமல்படுத்தியுள்ளது.
- 2017-2018ம் ஆண்டு காலத்தில் இந்தியாவிற்கு வந்த மொத்த வெளிநாட்டு நேரடி முதலீட்டில் மொரீசியஸ் முதல் இடத்தில் உள்ளது. அதைத் தொடர்ந்து அந்த நிதியாண்டில் சிங்கப்பூர் 37.36 டாலர் பில்லியன் தொகையோடு இரண்டாமிடத்தில் உள்ளது.
- தேசிய பசுமைத் தீர்ப்பாயம் மேகாலயா உயர்நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதியான தருண் அகர்வாலை தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலையை மூடிய விவகாரத்தில் வேதாந்தா நிறுவனம் தாக்கல் செய்த மனுவை விசாரிப்பதற்காக அமைக்கப்பட்ட மூன்று நபர் குழுவிற்கு தலைவராக நியமித்துள்ளது.
- பாலிவுட் நடிகர் சஞ்சய் தத் ஆறு வடக்கு மாநிலங்களில் போதைப் பொருளுக்கு எதிரான பிரச்சாரத்திற்கு தலைமை தாங்கிட விளம்பரத் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.
    - ஆறு மாநிலங்களாவன - உத்தராகண்ட், இமாச்சல பிரதேசம், பஞ்சாப், அரியானா, தில்லி மற்றும் ராஜஸ்தான். இதனோடு ஒன்றிய ஆட்சிப் பகுதியான சண்டிகரும் இதில் அடங்கும்.

# தேசியச் செய்திகள்

## நிதி ஆயோக்கின் மூவ் சைக்களத்தான்

- தூய்மையான மற்றும் எளிதில் அணுகிடும் வகையான போக்குவரத்து முறைகளை ஊக்குவிப்பதற்காக "Move Cyclathon" என்ற மிதிவண்டிப் பேரணியை நிதி ஆயோக் துவக்கி வைத்துள்ளது.
- "போக்குவரத்து வாரத்தின்" ஒரு பகுதியாக ஒருங்கிணைக்கப்படும் இந்நிகழ்ச்சி ஆகஸ்டு 31 முதல் செப்டம்பர் 6 வரையிலான 7 நாட்களில் 17 வகையான நிகழ்வுகளை கொண்டிருக்கும்.
- இந்நிகழ்வு ஆரோக்கியமான வாழ்வையும் குறைந்த மாசு கொண்ட நகரத்தையும் ஊக்குவிப்பதற்காகவும், நன்கு பகிரப்பட்ட, இணைக்கப்பட்ட மற்றும் குறைந்த

உமிழ்வு கொண்ட போக்குவரத்தைப் பற்றிய விழிப்புணர்வை பரப்புவதற்காகவும் எண்ணுகின்றது.

# சர்வதேசச் செய்திகள்

## கம்போடியா இந்தியா புரிந்துணர்வு ஒப்பந்தம்

- உலக பாரம்பரிய சின்னமான பிரயா விகாரில் உள்ள பழமையான சிவன் கோவிலை பாதுகாத்து மீள்கட்டமைத்திட கம்போடியாவிற்கு உதவிடும் வகையில் இந்தியா ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- இந்த பிரயா விகார் கோவில் கிபி 11வது நூற்றாண்டின் முதல் பாதி காலகட்டத்தைச் சார்ந்ததாகும்.
- இரண்டாவது புரிந்துணர்வு ஒப்பந்தம் கம்போடியாவின் சர்வதேச ராஜ்ஜிய மற்றும் பன்னாட்டு உறவுகளுக்கான நிறுவனத்திற்கும் (National Institute of Diplomacy and International Relations - NIDIR) இந்திய வெளியுறவுப் பணி நிறுவனத்திற்கும் இடைப்பட்டதாகும்.

## இந்தியா - சைப்ரஸ் முக்கிய ஒப்பந்தங்கள்

- இந்தியாவும் சைப்ரஸும் இரு நாடுகளுக்கிடையே இரு தரப்பு உறவுகளை பலப்படுத்த வேண்டி பல முக்கிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன.
- ஒரு முக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தம் பண மோசடியைத் தடுப்பதற்காக இந்திய நிதி புலனாய்வுப் பிரிவிற்கும் சைப்ரஸின் பண மோசடித் தடுப்புப் பிரிவிற்கும் இடைப்பட்டதாகும்.
- மற்றொரு புரிந்துணர்வு ஒப்பந்தம் சுற்றுப்புறச் சூழல் துறையில் ஒத்துழைப்பிற்காக கையெழுத்திடப்பட்டதாகும்.

# பொருளாதாரச் செய்திகள்

## ITI நிறுவனம் துவக்க நிறுவனங்களுடன் ஒப்பந்தம்

- ITI நிறுவனம் முன்னணி ஸ்டார்ட்-அப் நிறுவனங்களுடனும் தகவல் மற்றும் தொலைத் தொடர்பு தொழில்நுட்பம் மற்றும் இணையதள விவகாரங்கள் (Internet of Things) அடிப்படையிலான தீர்வுகள் உள்பட பலதரப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்யும் அசல் உபகரணங்கள் தயாரிப்பாளர்களோடும் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு உள்ளது.
- இதில் குடிமை மற்றும் இராணுவத்திற்கான மேம்படுத்தப்பட்ட ரேடார் அமைப்புகள், மேம்படுத்தப்பட்ட திசைவி (Router) அமைப்புகள், அடுத்த தலைமுறையான ஐந்தாம் தலைமுறை தொழில்நுட்ப பொருட்கள், தகவல் களஞ்சியம் மற்றும் வலைப்பின்னல் தீர்வுகள், வன்முறை பாதுகாப்புத் தீர்வுகள், மேம்படுத்தப்பட்ட அளவீட்டு முறைகள் மற்றும் வைபை பொருட்கள் மற்றும் தீர்வுகள் ஆகியவை அடங்கும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## கடலோரக் காவல் ரோந்துக் கப்பல் ICGS விஜயா

- கடலோரக் காவல் ரோந்துக் கப்பலான ICGS விஜயா (OPV-2) 2018 ஆகஸ்டு மாதம் 30ம் தேதி இந்தியக் கடற்படையிடம் வழங்கப்பட்டது.




- ஏழு கடலோரக் காவல் ரோந்துக் கப்பல்களின் வரிசையில், இந்தக் கப்பல் இரண்டாவதாகும்.
- இந்தக் கப்பல்களின் வரிசையில் முதல் கப்பலான ICGS விக்ரம், இராணுவக் கண்காட்சிக்கு முன்பு ஏப்ரல் 11-ம் தேதி அன்றே வழங்கப்பட்டுவிட்டது.

## அழற்சி வீக்க குடல் நோயைக் (IBD - Inflammatory bowel disease) கண்டறியும் வழி

- இரண்டு இந்திய அமெரிக்க விஞ்ஞானிகளான சந்திர மோகனும் சுப்ரா குகதாசனும், அழற்சி வீக்க குடல் நோயை கண்டறிவதற்கும் அதைக் கண்காணிப்பதற்குமான வழியை கண்டுபிடித்துள்ளார்கள்.
- ஐ.பி.டியை (IBD), ஊடுருவாமலேயே கண்டறியக்கூடிய குறைந்தபட்சம் 50 புரத உயிரிக்குறியீடுகளை கண்டுபிடிப்பதே இந்த வழியாகும்.
- ஐ.பி.டி (IBD) என்பது வயிற்றுக்போக்கு, வயிற்றுப் பிடிப்பு மற்றும் எடை இழப்புக்கு வழிவகுக்கும் ஒரு குடல் கோளாறு ஆகும்.
- இந்த IBD என்பது, உடம்பின் நோயெதிர்ப்பு அமைப்பானது அதனுடைய குடல் உயிரணுக்களை எதிர்க்கும்போது ஏற்படும்.

## நாசாவின் Icesat - 2

- பூமியின் துருவப் பனிகளின் உயரத்தில் உள்ள மாற்றங்களை முன்எப்போதும் இல்லாத அளவிற்கு விரிவாக அளவிடுவதற்காக, மிகவும் மேம்படுத்தப்பட்ட சீரொளிக் (laser) கருவியை (Icesat-2) நாசா அறிமுகப்படுத்தவுள்ளது.
- பனி, மேகம் மற்றும் நில உயர அளவீடு செயற்கைக்கோளானது, கிரீன்லாந்து மற்றும்

அண்டார்டிக்காவைச் சூழ்ந்துள்ள நிலத்தின் பனியினுடைய சராசரி ஆண்டு உயர அளவீடுகளின் மாற்றங்களை அளவிடும்.

- இது, நேரத்தின் அளவில் உயரத்தை அளவிடுவதற்கு, மேம்பட்ட நிலப்பரப்பு சீரொளி உயர அளவீடு அமைப்பைக் (ATLAS) கொண்டுள்ளது.

### சுருளும் வரைப்பட்டிகை (Rollable Tablet)

- அறிவியலாளர்கள் முதலாவது தொடுதிரை சுருளும் வரைப்பட்டிகையை பண்டைய சுருள்களிடமிருந்து உத்வேகத்தைப் பெற்றுக் கொண்டு நவீன கால கருவிகளை உருவாக்கிடுவதற்காக, உருவாக்கியிருக்கின்றனர்.
- MagicScroll என்றழைக்கப்படும் இந்த கருவி, நெகிழ்வான உயர் தெளிவு காட்சியமைப்பு கொண்டதாக உள்ளது. இந்த காட்சியமைப்பு அக்கருவியுடன் கணிணியிலான உள்ளக வேலைப்பாடுகளைக் கொண்டுள்ள முப்பரிமாண உருளை அமைப்புச் சுற்றி சுருட்டவும் அல்லது விரிக்கவும் வசதி கொண்டதாகும்.

## பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

### பாரதிய மனவட விகாஸ் புரஸ்கார்

- இந்த நிகழ்வானது, அரசியல், வணிகம், கல்வியியல் மற்றும் பொழுதுபோக்குத் துறைகளைச் சேர்ந்த புகழ்பெற்ற பிரபலங்களை கௌரவிப்பதற்காக, டெய்லி இந்தியன் மீடியா என்கிற தனியார் ஊடக நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டதாகும்.
- இந்திய கிரிக்கெட் வீரரான யுவராஜ் சிங், நடிகர்களான ஷபானா அஸ்மி, நந்திதா தாஸ் மற்றும் மேலும் 10 நபர்கள் இவ்விருதைப் பெற்றுக் கொண்டனர்.

### பிரஃபுல் பிட்வாய் நினைவு விருது

- 2018ஆம் ஆண்டிற்கான பிரஃபுல் பிட்வாய் நினைவு விருதுதானது, சர்வஹாரா ஜன் அண்டோலனின் இணை நிறுவனரான உல்கா மகாஜனுக்கு வழங்கப்பட்டது.




- இவ்விருதானது, 2016 ஆம் ஆண்டு ஆம்ஸ்டர்டாமில் இயற்கை எய்திய பத்திரிக்கையாளரும் சமூக ஆர்வலருமான பிட்வாய் நினைவாக நிறுவப்பட்டதாகும்.

# விளையாட்டுச் செய்திகள்

## உலக இளைஞர் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப்

- நீது, தாய்லாந்தின் நில்லடா மீகூனை தோற்கடித்து, உலக இளைஞர் குத்துச்சண்டைப் போட்டியில் 48 கிலோ எடைப் பிரிவில் தொடர்ச்சியாக தனது இரண்டாவது தங்கத்தைப் பெற்றார்.
- அவர் தனது முதல் உலக சாம்பியன்ஷிப் தங்கத்தை கடந்த ஆண்டு குவஹாத்தியில் நடைபெற்ற போட்டியில் வென்றிருந்தார்.



- முன்னாள் ஜூனியர் உலகச் சாம்பியன் குத்துச்சண்டை வீரரான சாக்ஷி சௌத்ரி அவர்கள் 57 கிலோ எடைப்பிரிவில் தங்கப்பதக்கத்தை வென்றார்.
- ஆசிய சாம்பியனான மணீஷாவும் (64கி) வெள்ளிப் பதக்கம்வென்ற அனாமிகாவும் (51 கி) வெள்ளிப் பதக்கங்களை வென்றார்கள்.

## ஐரோப்பிய கால்பந்து சங்க ஒன்றியத்தின் (UEFA) கால்பந்துக் கழக விருதுகள் 2018

- இந்த விருதானது, முந்தைய ஆண்டில், எந்த நாட்டைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவற்றிற்கு அப்பாற்பட்டு, UEFA உறுப்பினர் சங்க எல்லைக்குட்பட்ட கால்பந்து கழகத்துக்காக விளையாடிய சிறந்த வீரரை அங்கீகரிக்கிறது.
- இவ்வருடம், விருதானது கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டது.
    - 2017-18 ஆண்டிற்கான, UEFA சாம்பியன்ஷிப் லீக்கின் சிறந்த ஆட்டக்காரர் – லூகா மோட்ரிக் (ரியல்மேட்ரிட்)
    - 2017-18 ஆண்டிற்கான, UEFA சாம்பியன்ஷிப் லீக்கின் சிறந்த கோல்கீப்பர் – கெய்லோர் நவாய் (ரியல்மேட்ரிட்)
    - 2017-18 வருடத்தின் பெண்களுக்கான சிறந்த விளையாட்டு வீரர் – பெர்னில்லே ஹார்டர் (வி. எஃப்.எல். உல்ஃப்ஸ்பர்க்)



# முக்கிய தினங்கள்

## உலக தேங்காய் தினம் – செப்டம்பர் 02

- இந்தோனேஷியாவின் ஜகார்த்தாவைத் தலைமை இடமாகக் கொண்டிருக்கும் ஆசிய பசிபிக் தேங்காய் சமுதாயம் (APCC) உருவான நாளான, செப்டம்பர் மாதம் 2-ம் தேதி ஒவ்வொரு வருடமும் உலக தேங்காய் தினமாகக் கொண்டாடப்படுகிறது.




- APCC என்பது 18 உறுப்பு நாடுகளைக் கொண்ட நாடுகளுக்கிடையேயான சர்வதேச நிறுவனமாகும். இது, அதிகபட்ச பொருளாதார வளர்ச்சியை அடைவதற்காக, ஆசிய

பசிபிக் பிரந்தியத்தின் தேங்காய் வளர்ச்சிக்கான நடவடிக்கைகளை ஊக்குவிக்கவும், ஒருங்கிணைக்கவும் மற்றும் இப்பிராந்தியத்துக்கே உகந்ததாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- - - - - - - - - - - - - - -